
# சிவயோகர் சுவாமிகள் நினைவுப் பேருரை

## யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை காட்டும் ஆத்மிக வாழ்வு




பேராசிரியர், இலக்கிய கலாநிதி

**ப.கோபாலகிருஷ்ண ஐயர்**

வாழ்நாள் பேராசிரியர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



**05.09.2011**

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்**

**சிவயோக சுவாமிகள்**

*நினைவுப் பேருரை*

05.09.2011

# யோகசுவாமிகளின் நற்சிந்தனை காட்டும் ஆத்மிக வாழ்வு

பேராசிரியர் இலக்கிய கலாநிதி
ப. கோபாலகிருஷ்ண ஐயர்
வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

•தலைப்பு : யோகர்சுவாமிகள் நற்சிந்தனை காட்டும் ஆத்மிக வாழ்வு : • ஆசிரியர் : பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் • ©: ஆசிரியர். •பக்கம் :38. •அச்சிட்டோர்: கரிகணன் பிரிண்டேர்ஸ், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். • வெளியீடு : யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 05.09.2011

அன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய துணைவேந்தர் அவர்களே! பேரவை உறுப்பினர்களே, பீடாதிபதிகளே, பேராசிரியர்களே, விரிவுரையாளர்களே, அவையில் வீற்றிருக்கும் பெரியோர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கம்!

அகிலமும் வியக்கும் வண்ணம் அநுபூதிச் செல்வராக விளங்கியவர் சிவயோக சுவாமிகள். 1872ஆம் ஆண்டு வைகாசி மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் அவதரித்த சுவாமிகள் 1964ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் ஆயிலிய நட்சத்திரத்தில் திருவடி கலப்புற்றார். ஏறத்தாழ அரை நூற்றாண்டிற்கு மேலாக ஈழத்திருநாட்டிலே குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, மலைநாடு, கொழும்பு ஆகிய இடங்களில் நடமாடிய சுவாமிகள் தம்மை நாடிவந்த அடியார்களையும் அன்பர்களையும் தமது ஆத்மிக நற்சிந்தனைகளாலும் அருளுரைகளாலும் அறிவுரைகளாலும் உபதேசங்களாலும் ஆத்மிக வாழ்வுக்கு ஆற்றுப்படுத்தியவர்.

சுவாமிகள் தீர்க்கமான ஆத்மிகப் பயிற்சியை அவர் போற்றிய குருநாதனாகிய செல்லப்பா தேசிகரிடம் பெற்றவர். "குருபரன் அடியினை ஏத்துதல் இன்பம்" என்ற நம்பிக்கையை அடியவர்களிடம் ஏற்படுத்திய பெருமை சுவாமிகளையே சாரும். சுவாமிகளின் ஆத்மிகச் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டவர்கள் எத்தகைய வேறுபாடும் பாராட்டாத வராய் அவரைத் தங்கள் குருவாகப் போற்றி வணங்கினார்கள். சுவாமிகள் மேற்கொண்ட ஆத்மிகப் பணிகளையும் சிவத்தொண் டினையும் சிவதொண்டன் நிலையங்கள் மேற்கொண்டு வருகின்றமை சுவாமிகள் ஆற்றுப்படுத்திய ஆத்மிக வாழ்வின் வளர்ச்சியையும் தொடர்ச்சியையும் காட்டி நிற்கின்றது. சம காலத்திலே வாழ்ந்த ஒருவராக விளங்கிய சுவாமிகளைப் பற்றி அறியாதவர்களுக்கும் இளந்தலை முறையினர்க்கும் வருங்காலச் சந்ததியினருக்கும் சிவயோக சுவாமிகள் எவ்வெவ் வழிகளில் சைவ உலகை வாழ்வாங்கு வாழ வழிப்படுத்தினார் என்பதைத் தெளிவுபடுத்த அவரது

நற்சிந்தனைகள் பெரிதும் உதவுகின்றன. எனவே மக்களின் ஆத்மிக மலர்ச்சிக்கு மூலமாக அமைவது சுவாமிகளின் நற்சிந்தனைத் தொகுப்பே ஆகும்.

இத்தகைய சிறந்த ஆத்மீக ஞானியாகவும் குருபரனாகவும் விளங்கிய யோக சுவாமிகளின் நினைவுப் பேருரை இன்றைய தினம் இப்பல்கலைக்கழகத்தில் கைலாசபதி கலையரங்கில் நிகழ்வது மிகவும் பொருத்தமானதொன்றாகும். சைவப் பெருவள்ளலார் சேர். பொன். இராமநாதன் அவர்கள் "பரமேஸ்வரன் சொத்து" என்று போற்றிய புனித மண்ணில் அமைந்துள்ள இப்பல்கலைக்கழகத்தில் அத்தகைய அநுபூதிச் செல்வரது நினைவுப் பேருரையை நிகழ்த்த எனக்குக் கிடைத்தது அரியதொரு வாய்ப்பெனக் கருதி மகிழ்ச்சியடைகின்றேன். அதற்காக முதற்கண் இவ்வாய்ப்பினை எனக்கு நல்கிய எமது மதிப்பார்ந்த யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களுக்கு எனது மனமுவந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். இன்றைய நிகழ்வுக்கு அவர்கள் தலைமை தாங்குவது எமக்குப் பெருமையளிக்கின்றது. அடுத்து இப்பேருரை உரியவாறு நிகழ ஏற்ற ஒழுங்குகளை மேற்கொண்டு என்னோடு பல வழிகளிலும் தொடர்பு கொண்டு செயற்பட்ட எமது அன்புக்குரிய கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா. ஞானகுமரன் அவர்களுக்கு எனது மனமுவந்த நன்றிகள். மற்றும் யாழ். பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்களுக்கும் நன்றிகள் உரித்தாகுக.

இப்பேருரைக்குரிய நிதிவழங்கி ஒழுங்கமைத்த யோகசுவாமிகளின் சான்றோருக்கும் எனது நன்றிகள். அனைவருக்கும் சுவாமிகளின் குருவருள் கிடைத்து நலம்பெறப் பிரார்த்திக்கின்றேன். வருடந்தோறும் நடைபெற்றுவரும் இந்த நினைவுப்பேருரையின் வழி சுவாமிகளின் நற்சிந்தனைகளும் சிவ தொண்டின் மேன்மையும் நானிலமும் பரவ வழியேற்படும் என்பது திண்ணம். மனித குலம் ஆத்மிக வாழ்வில் மேன்மைபெற வாய்ப்பேற்படும்.

## யோகர் சுவாமிகளின் ஆத்மிக ஆளுமையும் குருத்துவ மகிமையும்

யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை காட்டும் ஆத்மிக வாழ்வு பற்றி நாம் விரிவாக ஆராயப்புகுமுன் சுவாமிகளின் ஆத்மிக ஆளுமையையும் குருத்துவச் சிறப்பையும் அறிந்து கொள்வதும் அவ்வாறு அவர் சிறப்படைவதற்கான பின்னணியையும் சற்று தெளிவுபடுத்துவதும் அவசியமாகும்.

புண்ணியபூமி எனப் போற்றப்பட்ட பாரத நாட்டினைப் போலவே திருமூலரினால் சிவபூமி எனப் போற்றப்பட்ட ஈழத்திருநாட்டிலும் சித்தர் பரம்பரை ஒன்று இருந்து வருகின்றது. சமயக் கொள்கைகள், கோட்பாடுகள் சமய சாஸ்திரங்கள் விதிக்கும் வழிபாட்டு நடைமுறைகள் ஆகியவற்றுக்கு அப்பால் சமயங் கடந்த சமரச மோனநிலையில் சித்தத்தைச் சிவன்பால் வைத்து யோக ஆற்றலினால் மனதை ஒருநிலைப்படுத்தி மெய்ப்பொருளாகிய இறைவனை உள்ளத்தில் உணர்ந்து அனுபூதிபெற்ற மகாஞானிகளே சித்தர்கள் எனப்படுகின்றனர். இவர்கள் அட்டமா சித்தி கைவரப்பெற்றவர்கள்; அத்தகைய அருளாற்றல் மூலம் "தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற வாக்கிற்கேற்ப மனுக்குலம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ ஆத்மிக நலம் பொருந்திய நற்சிந்தனைகளையும் அருளுபதேசங்களையும் தெய்விக இலக்கியங்களையும் உலகிற்கு அளித்துள்ளனர். சித்தர்கள் சமுதாயத்துடன் சேர்ந்தும் சேராமலும் வாழ்பவர்களாயினும் மனித குல மேம்பாட்டையே தமது தீர்க்கதரிசனமாகக் கொண்டவர்கள்.

சித்தர் என்ற சொல்லின் பொருளைப் பூரணமாக விளங்கிக் கொள்வது கடினமாகும். சித்தாகிய நல்லறிவு கைவரப்பெற்றவர்கள், சித்தத்தை வென்றவர்கள், சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள், சித்துக்கள் செய்வதில் வல்லவர்கள், சித்தத்தை அடக்கியவர்கள், உலகியலைத் துறந்தவர்கள், உலகியல் நடப்புக்கு மாறானவர்கள் ஆகிய சொற்றொடர்கள் அவர்கள் பற்றிய ஒரு பரிணாமத்தைக் காட்டி நிற்கின்றன.

மேலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட அதீத ஆற்றல் கைவரப்பெற்றவர்கள், வினை நீங்கப்பெற்ற சீவன்முத்தர்கள், பூரணமானவர்கள், புனிதமானவர்கள் என்ற விளக்கங்கள் அவர்கள் பற்றிய மற்றொரு பரிமாணத்தைக் காட்டுகின்றன. இவையாவற்றுக்கும் அப்பால் யோக சுவாமிகள் பற்றி நாம் சித்திக்கும் பொழுது, ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற சாதி சமயங் கடந்த நிலை, சமரச சன்மார்க்க நெறி, எளிமை, உயிர்களிடத்து அன்பு, மனித நேயம், சமயங்கள் விதிக்கும் புற வழிபாட்டிலும் பார்க்க உள்ளத்தில் உள்ளொளியை ஒளிரச் செய்யும் அக வழிபாட்டிற்கு முக்கியத்துவம் அளித்தல், ஆன்ம ஈடேற்றம், குருநெறி ஆகிய சமூக ஆன்மிக மேம்பாட்டினையே வற்புறுத்தும் ஒருவராக அவர் திகழ்ந்தார் எனக் கூறுவது பொருத்தமாகும். சுவாமிகள் எல்லோரையும்போல் ஒருவர் என்ற எண்ணத்துடன் எல்லோர் மத்தியிலும் வாழ்ந்தவர். ஆதலினால் அவரை உள்ளவாறே உணர்ந்துகொள்ள அனைவராலும் இயலவில்லை. அவரை இன்னான் இவர் என்றறிந்தவர் சிலரே. சுவாமிகளின் ஆத்மிக வழிகாட்டலில் ஈர்க்கப்பட்ட அன்பர்கள் பலர் தத்தம் அனுபவங்களை நூல்வடிவிலும் கட்டுரை வடிவிலும் வெளிப்படுத்தியுள்ளதிலிருந்து சுவாமிகளின் ஆத்மிக ஆளுமையின் சிறப்பை நாம் ஓரளவு தெளிந்து கொள்ளலாம்.

தமது ஆத்மிக ஞானக் குரவராக அன்பர்களால் போற்றி வழிபடப்பட்ட சுவாமிகள், சதாசிவன், யோகநாதன், யோகர், யோகர் சுவாமிகள், தம்பிஐயா என்ற பல பெயர்களால் அழைக்கப்பட்டவர். மாவிட்டபுரம் என்னும் ஊரில் அம்பலவாணர் சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அருந்தவப்புதல்வராக 29.05.1872 இல் அவதரித்தவர். தமது அன்னையை இளமையில் இழந்தவர். கிறிஸ்தவச் சூழலில் கல்வி கற்றவர்; ஆங்கிலேயர் ஆட்சியில் உத்தியோகம் பார்த்தவர். ஆயினும் அவர் ஆத்மிக நாட்டங்கொண்டவராகத் திகழ்ந்தார். அவரின் சிந்தனை, சொல், செயல் யாவும் தன்னை உணர்ந்துகொள்ளும் ஆத்மிகப் பயிற்சிக்கு உதவுவனவாகவே அமைந்தன. இறைவனாகிய மெய்ப்பொருளைக் காணும் இலட்சியமே அவரிடம் மேலோங்கிக் காணப்பட்டது. தனது ஆத்மிகம் சார்ந்த

ஞானத்தை விரிவடையச் செய்யும் நோக்கில் ஞானநூற் பயிற்சியில் ஈடுபட்டார். தமிழிலும் வடமொழியிலும் ஆங்கிலத்திலும் உள்ள ஞானநூல்கள் பலவற்றைக் கற்றுத் தேர்ந்தார். தமிழ்மறையாம் திருக்குறளை ஆர்வத்தோடு படித்தார். சைவத் திருமுறைகளையும் கற்றார். தாயுமானவர் பாடல்களையும் பட்டினத்தடிகளின் திருநூல்களையும் சித்தர் பாடலையும் கற்றார். ஞானநூல் வரிசையில் சிறப்புப்பெற்ற குருநமசிவாயர் பாடிய நமச்சிவாயமாலை முழுவதையும் மனனம் செய்ததோடு பின்னர் தாமும் குரு நமச்சிவாய மாலை பாடினார். தத்துவராய சுவாமிகள் பாடிய "பாடுதுறை" என்ற நூல் சிறப்பானதொன்று. அந்நூல் குருநெறி சென்று பெற்ற அநுபூதிஞானத்தை இனிமையாகக் கூறுவது. அந்நூலை சுவாமிகள் நன்றாக மனதிற் பதித்துக்கொண்டார். முதன்மையான உபநிடதங்கள், பகவத்கீதை, சங்கராச்சாரியாரின் பிரமசூத்திர பாஷ்யம் முதலிய வடமொழி ஞானநூல்களையும் கற்றுத் தேர்ந்தார். விவிலிய வேதத்திலுள்ள திருவசனங்கள் பல அவருக்கு மனனமாயிருந்தன. பிற்காலத்தில் சுவாமியை அண்டி வாழ்ந்தவரான சந்தசுவாமி விவிலிய வசனங்கள் பலவற்றின் உட்பொருளைச் சுவாமிகளின் வாய்மொழிகளிலிருந்தே தெளிவாக்கிக் கொண்டதாக சுவாமிகள் கூறியுள்ளமை அவரது பரந்த சமயக் கொள்கைக்குச் சான்றாகும். குணங்குடிமஸ்தான் சாகிபு பாடல்களும், இஸ்லாமியத் திருமறையான குர்ஆனின் வசனங்கள் பலவும் அவருக்கு மனனமாயின. இவ்வாறு பல்துறை சார்ந்த சமயஞ் சார்ந்த கலைஞானத்தை சுவாமிகள் இந்நாட்களில் ஈட்டிக்கொண்டார்.

சுவாமிகள் கிளிநொச்சியில் பணிபுரியும் காலத்திலே ஒழுக்கத்தால் உறுதிபெற்ற வாழ்வு, கடவுட் பக்தி, ஞானியர் நாட்டம்,ஞான நூற்பயிற்சி ஆகிய இயல்புகள் முதிர்ந்து ஆத்மிக வாழ்வு வாழ்வதற்கு தகைமை யான ஒருவராய் மலர்ச்சி பெற்றிருந்தார் . இவரது இத் தகுதிப்பாட்டினைச் சுவாமிகள் அலுவலகத் தலைவராக பதவி வகித்த பிறௌனி எனும் ஆங்கிலேயர் கூறிய வசனம் எடுத்துக் கூறுகின்றது. அவர் "நீர் ஒரு

தெய்விக மனிதர் (You are a God fearing man) எனத் தம்மை நோக்கிக் கூறியதாக சுவாமிகள் ஏனையோர்க்கும் கூறியுள்ளார்.

யோக சுவாமிகளின் ஆத்மிக ஆற்றல் அடியார்களது அனுபவ திறனுக்கேற்ப அவர்களிடையே வெவ்வேறு வகைகளில் தோன்றலாயிற்று யோக சுவாமிகளை எல்லாம் வல்லவித்தகராக அதீத ஆற்றலினால் அற்புதங்கள் பல நிகழ்த்திய சித்தராக பார்த்த ஓர் அடியார் கூட்டம் அவரைச் சூழ்ந்திருந்தது. தாங்கள் வாழுகின்ற காலத்திலேயே தம்மை நாடிவரும் மக்களின் துன்ப துயரங்களை நீக்கி நல்வாழ்வு வாழ வழிகாட்டிய சித்தர்கள் பரம்பரையில் யோக சுவாமிகளும் ஒருவராகத் திகழ்ந்தார். பல அடியார்கள் அவரது ஆத்ம ஞானத் திறத்தால் தாம் விரும்பியவற்றைப் பெற்றுத் திருப்தியுற்றனர். உள்ளத்தில் உலகப்பற்றை எரித்து ஐம்புல நுகர்ச்சியைத் துறந்த உண்மைத் துறவியாக யோக சுவாமிகள் திகழ்ந்தார். வள்ளுவர் கூறுவதற்கு அமைவாக "மனத்துக்கண் மாசிலனாகி" அறவாழ்க்கை வாழ்ந்த புனிதராகப் பரிணமித்தார். அவரது தூய்மையான துறவு வாழ்க்கை வெறுமனே சித்துக்கள் நிகழ்த்தியதாக அமையவில்லை. அதற்கும் அப்பால் ஞானப் பொக்கிஷமான நற்சிந்தனைகள் மூலம் மக்களிடையே ஆத்மிக விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டார். ஓதியோதி உணர்வதும் தன்னையே தவமியற்றி தன்னையே அறிவதும், நான் யார்? என்றுள்ளமார்? எனத் தன்னை அறிந்து மெய்ப்பொருளைக் காணும் முயற்சி யுடையவராய்த் திகழ்ந்தவர். நல்லூர்த் தேரடியில் ஞான தேசிகனான செல்லப்பரைக் கண்டதிலிருந்து படிப்படியாகத் தான்பெற்ற அனுபூதி நிலையினை தன்னுள் ஏற்பட்ட தெய்விக மாற்றங்களையும் கூறிச் செல்கின்றார். சுவாமிகள் சித்துக்கள் ஆற்றும் ஆற்றல் கைவரப் பெற்றவராயினும் அவர் பூரணத்துவம்பெற்ற ஒரு மறைஞானியாக வாழ்ந்து சமய, ஆத்மிக சமூக ரீதியில் மனித குலம் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து ஆத்மிக ஈடேற்றம் பெற வழிகாட்டிய ஒரு ஞான குருவாகத் திகழ்ந்தார்.

**ஆத்மிக ஞான பரம்பரையின் சிறப்பு**

யோக சுவாமிகள் ஆத்மிக வாழ்வைத் தாயுமான சுவாமிகளின் ஆத்மிக வாழ்வோடு ஒப்பிடுமிடத்து நன்கு பொருத்தமாக அமைகின்றது. தாயுமானவர் குருநெறிநின்ற ஞானியாக, சமய வாதியாக, தத்துவவாதியாக, சமய சமரசவாதியாக, யாவற்றுக்கும் மேலாக ஒரு சிறந்த ஆத்மிகத் துறவியாகப் பரிணமித்ததுபோன்று யோக சுவாமிகளும் பல்துறை சார்ந்த ஆத்மிக ஞானியாகப் பரிணமித்தவர். பல்துறை சார்ந்த ஞானநூல்களைக் கற்றுத் தேர்ந்த தாயுமானவர் தமது பாடல்கள்மூலம் ஆத்மிக வாழ்வை வளப்படுத்தியது போன்று யோக சுவாமிகளும் ஞானநூல் தேர்ச்சிமிக்க வராய்த் தமது நற்சிந்தனைப் பாடல்கள் மூலம் ஆத்மிக வாழ்வை வளம்படுத்தினார். இவ்விரு ஆத்மிக ஞானியரின் பாடல்களில் ஆத்மிகஞ் சார்ந்த சிந்தனை ஊற்றெடுப்பதற்கு அவர்கள் கற்றுத் தேர்ந்த ஞான நூல்களே மூலமாக அமைந்தன. இந்நூல்களின் உன்னத சிந்தனைகள் இவ்விருவரது பாடல்களிலும் இழையோடி விளங்கின. தாயுமானவர் எவ்வாறு அரச பதவியைத் துறந்து ஞான வாழ்வை நாடினாரோ அது போன்றே யோக சுவாமிகளும் கிளிநொச்சியில் பார்த்த அரசபணியைத் துறந்து ஞான வாழ்வினை நாடினார். இருவரும் ஆத்மிக பயிற்சியில் ஈடுபட்டதன் பயனாய் அவர்கள் மூலம் வெளிபட்ட பாடல்கள் ஆத்மிக நலம் பொருந்தியவையாக விளங்கின. இத்தகைய ஞானிகள் வளர்த்தெடுத்த ஆத்மிக ஞான பரம்பரை இந்தியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளில் நன்கு வேரூன்றி ஆத்மிக வாழ்வுக்கு வழிகாட்டும் சிறப்பைப் பெறலாயிற்று. கீழைத்தேய அறிஞர்கள் மாத்திரமன்றி மேலைத்தேய அறிஞர்களும் இந்நாடுகளில் சிறப்புப்பெற்ற ஆத்மிக மரபின் மகத்துவத்தைப் போற்றியுள்ளனர்.

இந்தியாவில் எழுந்த சமய நூல்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு ஆய்வுகள் மேற்கொண்ட பேரறிஞர் மக்ஸ்முல்லர் ஆவார். அவரது இந்தியா பற்றிய சிந்தனைகள் ஈழவள நாட்டிற்கும் பொருந்தும். மண்ணிலே உள்ள உண்மையான விண்ணகம் இந்தியா என்று குறிப்பிடுகின்றார் ஜெர்மன் நல்லறிஞர் மக்ஸ்முல்லர். மேலும் அவர் மனந்திறந்து கூறுமிடத்து.

" இந்நிலவுலகில் மனித உள்ளம் முழுவளம் பெற்று வாழ்க்கையின் பெரும் பிரச்சினைகளை ஆராய்ந்துள்ள இடம் எது என்று என்னைக் கேட்டால் இந்தியாவையே காட்டுவேன்.. தத்துவ ஞானியராம் பிளேட்டோ, கான்ட் ஆகியயோரைக் கற்றவரின் கவனத்தையும் இழுக்க வல்லதாய பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்ட மனித உள்ளம் இருக்கும் இடம் எது என்று என்னைக் கேட்டால் இந்தியாவையே நான் சுட்டிக்காட்டுவேன். ஐரோப்பியர்களாகிய நமது இக வாழ்வுக்கு மட்டுமின்றி நிலைத்த் அமர வாழ்வுக்காகவும் நாம் முழு மனித வாழ்வு வளம் பெறும் வகையில் நம் அக வாழ்வை நிறைவாக்கவும் நமது மனக் கோணலை எந்த இலக்கியம் நிமிர்த்தி விடும் என்று என்னை நானே கேட்டுக்கொண்டால் மறுபடியும் இந்தி யாவையே காட்டுவேன்".

என்ற இக் கூற்று தாயுமானவர் யோக சுவாமிகள் போன்றோரது ஆத்மிக வளங்கொண்ட பாடல்களின் மேன்மைக்கும் பொருந்தும் எனக் கொள்வதிற் தவறில்லை. சுருங்கக்கூறின் ஆத்மிக தரிசனத்தின் மூலம் இந்திய ரிஷிகள் வெளிப்படுத்திய ஆத்மிக சிந்தனைகளின் வளர்ச்சியும் தொடர்ச்சியுமாகவே தாயுமானவரின் பாடல்களும் யோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களும் கொள்ளப்படத்தக்கவை.

**ஞானியரது தொடர்பு**

யோக சுவாமிகள் கிளிநொச்சியில் பணிபுரியும் காலத்திலேயே (1897) சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயம் இடம்பெற்றது. அந்த வீரத் துறவிக்கு யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் சுவாமிகளும் கலந்துகொண்டார். சுவாமி விவேகானந்தரின் வருகை தொடர்பாகச் சுவாமிகள் உற்சாகத்துடன் கூறிய விடயங்கள் இளமைக் காலத்திலே அவரிடத்தில் மண்டிக் கிடந்த ஞானியர் நாட்டத்தை ஒருவாறு உணர்த்துவனவாயின. தந்தையாரோடு மலைநாட்டில் வாழ்ந்துவந்த காலத்தில் இயற்கையழகில் லயித்திருந்த காலத்தும் கிளிநொச்சியில்

அரசபணியாற்றிய காலத்தும் சுவாமிகளின் எண்ணம், சிந்தனை யாவும் சற்குருவையடைந்து. அவர் காட்டும் குருநெறியில் நிற்க வேண்டும் என்பதாகவே இருந்தன. சுவாமிகளிடம் இயல்பாகவே அமைத்திருந்த துறவு நோக்கு, ஞான நாட்டம், ஞானநூற் பயிற்சி ஆகியன அவரை உலகியல் சார் உத்தியோகத்திலிருந்து விலகிச் சற்குருவை நாடத் தூண்டின.

**யோக சுவாமிகளின் சற்குரு தரிசனம்**

குரு மகிமை பற்றி திருமூலரின் திருமந்திரமும் மற்றும் குருகீதையும் விதந்து போற்றுகின்றன. ஆத்மிக வாழ்வு வளம் பெற குருவின் வழிகாட்டலும் குருநெறி நிற்றலும் இன்றியமையாதன. குருகீதை (1.46)

"குருவே பிரம்மா; குருவே விஷ்ணு குருவே தேவ தேவ ராகிய மகேசுவரர்
குருவே பரப்பிரம்மம்; அந்த குருவிற்கு நமஸ்காரம்"

என குரு வணக்கத்தின் சிறப்பைக் கூறும். மேலும் குருவை சிந்தித்தல், சேவித்தல், பேசுதல், நமஸ்கரித்தல் ஆகியவை உயர்ந்த செயல்களெனப் போற்றுகின்றது. குருவே தெய்வம்; குருவே தர்மம்; குருவிடம் நிலைத்தல் சிறந்த தவம் எனவும் குறிப்பிடுகின்றது. திருமூலர் இறைவனே குரு என்று குருவாகிய இறைவனைச் சிவமெனக் குறிப்பிடுகின்றார்.

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி" என்ற வாக்கு குறிப்பிடற் பாலது. குருவை உயர்ந்தவராகப் போற்றுவதும் அவர்மீது பூரண நம்பிக்கை ஏற்படவும் அவரை இறைவன் என்ற நிலையில் வைத்து பக்தி செலுத்துவதும் உயர்ந்த செயல்களாக இந்துப் பாரம்பரியத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. குருசீடனுக்குக் கூறும் வாசகமே உபதேசம். குரு உபதேசத்தால் அருட்கண் விழிப்படையும் என்ற காரணத்தால் திருமூலர் திருமந்திரத்தின் முதலாந் தந்திரத்தில் "உபதேசம்" என்ற தலைப்பில் அதன் சிறப்பைக் கூறுகின்றனர்.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்

தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே.

(திருமந்திரம் 1: 139)

என வரும் பாடல் சிவகுருநாதனின் அருளால் மாத்திரமே தெளிவு உண்டாகும். என வற்புறுத்தப்படுகின்றது.

சுவாமிகளின் ஞான நாட்டத்திற்கு உரியவராக விளங்கிய சுவாமி விவேகானந்தரின் ஞான குருவாகத் திகழ்ந்தவர் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர். ஸ்ரீ இராமகிருஷ்ணரின் உபதேசங்களிலும் குருவின் மகத்துவம் பற்றிய அவரது சிந்தனை தெளிவாகவுள்ளது.

"தன் குருவை வெறும் மானுடனாகக் கருதுபவன் ஆத்ம சாதனத்தில் முன்னேற்றம் அடையான். சச்சிதானந்தப் பொருள் ஒருவனுடைய குரு என்னும் மேனியின் மூலமாக இயங்கி மந்திரோபதேசம் செய்கிறது. ஆதலால் தன் குருவையே சச்சிதானந்தமாகக் கருதுபவன்தான் முன்னேற்றம் அடைகின்றான்".

(ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்சரி பக்.214)

என்ற சிந்தனை சுவாமிகள் போற்றிய குருநெறிக்கு நன்கு பொருந்துவதாக அமைகின்றது. எவ்வாறு ஸ்ரீ இராமகிருஷ்ணருக்கும் சுவாமி விவேகானந்தருக்கும் இடையே ஆத்மிகஞ் சார்ந்த குரு சிஷ்ய உறவு காணப்பட்டதோ அது போன்று ஞான குருபரனாகிய செல்லப்ப தேசிகருக்கும் சுவாமிக்கும் இடையே குரு – சீட உறவு சிறப்படைந்து காணப்பட்டது. சுவாமிகள் தம் குருபரனான செல்லப்பா சுவாமிகளை இறைவனாகவே கண்டார். ஆத்மிக வாழ்வு ஒருவனுக்கு செம்மையுற குருவின் வழிகாட்டல் இன்றியமையாதது என்பதற்குச் சான்றாக சுவாமிகளின் நற்சிந்தனைத் தொகுப்பில் இடம்பெறும் குருதோத்திரப் பாடல்கள் தக்க சான்றாக அமைவன.

### நல்லூர் புனிதபூமி

யாழ்ப்பாணத்தில் நல்லூர் ஞானிகள் 'சமயச் சான்றோர்கள்' சித்தர்கள் பாதம் தீண்டப்பட்ட புனித பூமியாகும். யோக சுவாமிகளும அவரது ஞான குருவாகிய செல்லப்பா சுவாமிகளும் நல்லூர் கந்தசுவாமி ஆலயச் சுற்றாடல்களில் வாழ்ந்தே மக்களின் ஆத்மிக வாழ்வு வளம்பெற ஞான ஒளி பரப்பினர். சைவ சித்தாந்த மரபில் போற்றப்படும் குருலிங்க சங்கமம் என்பதில் குருவே முதன்மை பெறுவது சிந்தனைக்குரியது. நல்லூர் தேரடி சித்தர் மரபு மேலோங்கும் புனித பூமியாயிற்று. சுவாமிகளும் தமது ஆத்மிக சிந்தனை வளம்பெற நல்லூர் முருகனின் அருளைப் பெறும் வகையில் பக்திப் பரவசத்துடன் அடிக்கடி முருகப்பெருமானைத் தரிசிக்கச் செல்லும் வழக்கமுடையவரானார். நல்லை நகர் நாவலர் வழி மேன்மையுற்ற யாழ்ப்பாண கந்தபுராண கலாசாரத்தின் மற்றொரு பரிமாணமாக சித்தர் மரபு செழிப்புற சுவாமிகளும் செல்லப்பரும் அரிய பணியாற்றியுள்ளனர்.

செல்லப்பா தேசிகரின் சற்குரு தரிசனத்தைப் பெற்ற சுவாமிகளுக்கு அவர் வழங்கிய உபதேசங்கள் அவரது நற்சிந்தனைப் பாடல்கள் வளம்பெற உதவின. செல்லப்பரின் வாக்கும் பார்வையும் யோக சுவாமிகளுக்கு ஆத்மிக பலத்தையளித்தன. நல்லூர்த் தேரடியில் செல்லப்பரின் ஞான உபதேசங்களைப் பெற்றுக்கொண்ட யோக சுவாமிகள் தமது நற்சிந்தனைப் பாடல்களில் தன் குருவின் சிறப்பை உயர்வைப் பல்வேறு கோணங்களில் போற்றியுள்ளார். குருநெறி நின்று ஆத்மிக மரபின் ஊற்றுக்களைக் கண்டறிந்து அம்மரபு உலகெங்கணும் பரவ வழிவகுத்தவர் சுவாமிகள் அவரது இந்த ஆத்மிகப் பணி எதிர்காலச் சந்ததியினரின் ஆத்மிக வாழ்வு செம்மையுற குருவின் வழிகாட்டல் இன்றியமையாதது என்னும் உண்மையைத் தெளிவுபடுத்தியது.

### நற்சிந்தனையின் சிறப்பு

சுவாமிகளிடம் ஆத்மிக வாழ்வுக்குரிய வழிமுறைகளை அறிய நாடி வந்த அன்பர்களின் பொருட்டு அவரிடமிருந்து இயல்பாகவே சுரந்த

உபதேசங்களைப் பெற்ற அன்பர்கள் அவற்றைப் பக்குவமாகப் பேணி வந்தனர். இவையும் சுவாமி அருளிய நற்சிந்தனைகளும் சிவதொண்டன் என்ற இதழ் வாயிலாக வெளிவந்தன. அவற்றையும் மேலும் பல அடியார்கள் பேணி வைத்திருந்தவற்றையும் தொகுத்துத் தமது நன்மைக்காகவும் எதிர்காலச் சந்ததியினரின் நலனுக்காகவும் ஆத்மிக வாழ்வுக்கு வழிகாட்டும் என்ற நம்பிக்கையில் "நற்சிந்தனை" யாகவும் "எங்கள் ஆசான் அருள் மொழிகள்" ஆகவும் நூலுருவில் வெளியிட்டனர். இவ்விரு நூல்களும் உலகெங்குமுள்ள ஆத்மிக – நாட்டங்கொண்ட அனைவருக்கும் பயன்படத் தக்க வகையில் Natchintanai, Words of Master என ஆங்கிலத்தில் மலர்ந்தன.

நற்சிந்தனை என்னும் சொற் பொருளை உணர்ந்து நயப்பதற்கு ஏதுவாக நற்சிந்தனை என்ற பெயர் கொண்டு முதன்முதல் மலர்ந்த அருள் வாசகத்தில் ஒரு பகுதி தெளிவுபடுத்துகின்றது. **சிவயோக சுவாமிகளின் வாழ்க்கையும் வழிகாட்டுதலும்** (2004) என்ற நூலை எழுதிய செல்லத்துரை சுவாமிகள் இப்பகுதியை எடுத்துக்காட்டுகிறார்.

> "நமது உயிர்க்குயிராய் இருப்பவர் கடவுளே. ஆகையால் நாம் அவருடைய உடைமை. அவருடைய அடிமை, நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே, நாம் அவரை ஒருபோதும் மறந்திருக்க முடியாது. நமக்கு ஒரு குறையுமில்லை. நாம் என்றுமுள்ளோம். எங்குமிருக் கின்றோம். எல்லாமறிவோம். இப்படியே நாம் இடையறாது சிந்தித்துச் சிந்தித்துக் கீழ்மையான குணங்களைப் போக்கி மேலான தெய்வத்துவத்தை அடைவோமாக.

இவ்வுரையில் குறிப்பிட்டுள்ளவாறு கீழ்மையான குணங்களைப் போக்கி மேலான தெய்வத்துவத்தை அடையச் செய்யும் சிந்தனையே நற்சித்தனையாகும். சுவாமிகள் நற்சிந்தனை எனும் நல்லமுதம் என்றே

மொழிந்துள்ளார். யோக சுவாமிகள் இவற்றைத் தமது குருவாகிய செல்லப்பா தேசிகரிடமிருந்து பெற்று உலகத்தாரது ஆத்மிக வாழ்வுக்கேற்ற வகையில் பல்வேறு வடிவங்களில் அமைத்து தம்மை நாடி வந்த அன்பர்களுக்கு அளித்தார். அன்பர்களும் அவரது நற்சிந்தனைகளை உள்ளத்திலிருத்தி நல்வாழ்வு பெற்றனர். நம்பிக்கையோடு ஓதும் அனைவருக்கும் நற்கதி யளிக்கும் "வாரா வரவினில் வந்த சஞ்சீவியே" நற்சிந்தனையாகுமென யோக சுவாமிகள் பற்றிய நூலில் செல்லத்துரை சுவாமிகள் பொருத்தமுறக் குறிப்பிட்டுள்ளார்.

யோக சுவாமிகளின் நற்சிந்தனைகள் தொகுக்கப்பெற்று "நற்சிந்தனை" என்னும் பெயரோடு முதற்பதிப்பு நூலாக 1959ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. மேலும் அந்நூலிற் சேராதனவும் சிவதொண்டன் வெளியீட்டில் வெளிவராதனவுமான செய்யுள் மணிகளையுஞ் சேர்த்து இரண்டாம் பதிப்பாக 1962ஆம் ஆண்டு சிவதொண்டன் சபை வெளியிட்டுள்ளது.

**யோக சுவாமிகளின் நற்சிந்தனை காட்டும் ஆத்மிக வாழ்வு**

ஆத்மிகம் என்றாலே இறைவழிபாடும் சில ஆசார அனுஷ்டானங்கள் மட்டுமே எனப் பலரும் நம்புகின்றனர். ஆனால் ஆத்மிகம் என்பது மனிதன், கடவுள் பிரகிருதி முதலான அனைத்தையும் பற்றிய மிகவும் ஆழமும் விரிந்ததுமான சிந்தனையும் ஆராய்ச்சித் தெளிவுமேயாகும்.

> "ஆன்மிகம் என்பது மாபெரும் சமுத்திரமாகும். அதைப் படனம் செய்யச் செய்ய அதைக் கவனமாய்ப் படித்து விரிவான சிந்தனையும் ஆராய்ச்சியும் செய்யச் செய்ய மனிதனுக்கு மிகவும் அற்புதமான அறிவும் அனுபூதியும் சித்தியாகும். ஆன்மிகத்தின் அடிப்படை நூல்களைப் படிக்கும்போது இந்த உண்மை நடைமுறையில் நிதர்சனமாய் தெரிய வரும்".

(ஆன்மிகம் – ஒரு சிந்தனை – பக்.4)

இவ்வாறு ஆன்மிகம் பற்றிய தெளிவான ஒரு விளக்கத்தை அஞ்ஞாதன் என்பவர் தமது **ஆத்மிகம் - ஒரு சிந்தனை** (1998) என்ற நூலிற் தருகின்றார். எமது ஆத்மா சம்பந்தமானது. "ஆத்மிகம்" எத்தனையோ சர்ச்சைகளுக்குப் பாத்திரமானதுதான் ஆத்மா என்பது. ஆத்மா என்னும் ஒரு பொருள் இல்லை; அதற்கு அஸ்திவாரமும் (உண்டென்ற நிலைமை) இல்லை என்று எத்தனையோ பேர் வாதாடியிருக்கின்றார்கள். இன்றைக்கும் அவ்வாதம் தொடர்ந்தவா றேயிருக்கிறது. அதேசமயத்தில் ஆத்மா என்னும் பொருள் உண்டு. அதற்கு அஸ்திவாரமும் உண்டென்று எத்தனையோ பேர் நிரூபணம் செய்திருக்கிறார்கள். தற்போதும் நிரூபிக்கப்படுகின்றது. வேதாந்தமும் சைவ சித்தாந்தமும் வெவ்வேறு வழிமுறைகளில் அதுபற்றி ஆராய்ந்துள்ளன. இந்த ஆத்மா என்ற வார்த்தையால் உத்தேசிப்பது தான் என்ன? அது எத்தகைய பொருளால் இருக்கின்றது? அதன் உருவமும் சுபாவமும் என்ன? என்பது பற்றிச் சிந்திக்க விழைபவர்களுக்கு சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்கள் தெளிவான விளக்கங்களைத் தருகின்றன.

மனித குலத்திற்கே ஆத்மிகம் சம்பந்தமான அறிவு இன்றியமை யாததொன்று என சுவாமிகள் பரிபூரணமாக உணர்ந்ததன் பயன்தான் நற்சிந்தனை. ஆத்மிகம் சம்பந்தமான அறிவுதான் பூரணமான மன நாகரிகமுள்ள மனிதனை உருவாக்குகின்றது. பரந்த மனப்பான்மை, சமபாவம், சம தரிசனம் முதலிய அரிய குணங்கள் எல்லாமே மனிதனுக்கு ஆத்மிக சிந்தனைமூலமாகவே உண்டாகின்றன. நல்லொழுக்கந்தான் ஆத்மிகத்தின் அடிப்படையாகும். நல்லொழுக்கத்தால் இதயம் தூய்மை அடைகின்றது. இதயம் பூரணமாய்த் தூய்மையடையும்போது மனிதன் பக்குவநிலையை அடைகின்றான். இத்தகைய உண்மைதனை உணர்ந்த யோக சுவாமிகள் மிகவும் தெளிவான சிந்தனைகள்மூலம் மக்களை ஆத்மிக வாழ்வுக்கு வழிப்படுத்தினார். அவரது நற்சிந்தனை நூலின் நுழைவாயில் தோரணம் போன்று அமைந்திருக்கும் சுவாமியின் கையெழுத்திலான குறிப்பில் ஆத்மா பற்றிய உண்மை தெளிவாகின்றது.

"நீ உடம்பன்று; மனமன்று; புத்தியன்று; சித்தமன்று; நீ ஆத்மா. ஆத்மா ஒருநாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக் கடவது. ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது தரும நெறியிற் பிசகாதே."

(நற்சிந்தனை)

என்ற குறிப்பு ஆன்ம விளக்கத்திற்குப் பொருத்தமாக உள்ளது. சுவாமிகளின் மனதுக்கு உவந்த ஒருவராகத் திகழ்ந்த சுவாமி விவேகானந்தர் ஆத்மா பற்றியும் , ஆத்மிக வாழ்வு பற்றியும் கூறும் சிந்தனை சுவாமிகளின் மேற்குறித்த சிந்தனையோடு ஒப்பு நோக்கற்பாலது.

"நீங்கள் முதலில் கேட்க வேண்டியது இந்த ஆத்மாவைப் பற்றிய உண்மை. நீங்கள் கேட்டிருந்தால் அதைப்பற்றிச் சிந்தியுங்கள். பிறகு அதைப் பற்றித் தியானம் செய்யுங்கள். வீண்வாதங்கள் இனி வேண்டாம். நீங்கள் எல்லையற்ற ஆத்மாதானா என்று உங்களைத் திருப்தி செய்து கொள்ளுங்கள்; அது உண்மையானால் நீங்கள் உடல் என்று நினைப்பது பொய். நீங்கள் ஆன்மா; அதை உணர வேண்டும். ஆத்மா தன்னை ஆத்மாவாகப் பார்க்க வேண்டும். இப்பொழுதோ ஆத்மா தன்னை உடலாகப் பார்க்கின்றது. அது நிற்க வேண்டும். இந்த உணர்வு வந்தவுடனேயே உங்களுக்கு முக்தி கிடைத்துவிட்டது."

என சுவாமி விவேகானந்தர் ஆத்ம விளக்கம் தந்துள்ளார். இவ்வாறாக ஞானியரிடையே ஆத்மா பற்றிய விளக்கங்களில் சிறந்த ஒற்றுமை காணப்படுவது எமது சிந்தனைக்குப் பயனளிப்பனவாக உள்ளன.

யோக சுவாமிகள் இத்தகைய ஆத்ம விளக்கம் தருவதற்கு வழிகாட்டியவர் அவரது குருநாதர் செல்லப்பா சுவாமிகள் ஆவார்.

**செல்லப்பா சுவாமிகள் காட்டிய வழி**

இறைவனே செல்லப்பர் வடிவில் வந்து தன்னை ஆண்டு கொண்டார் என்பதனை,

இருவினையான் மதிமயங்கி இடர்பட்டுக் கிடப்பேனைக்
கருணையினால் ஆண்டுகொள்ளக் கடவுள் திருவுளங் கொண்டு
அருள்மேனி தாங்கி அவனியிலே வந்தானைத்
திருவாழும் நல்லை நகர்த் தேரடியில் கண்டேனே.

என்ற இப்பாடலில் தமது குருநாதர் தம்மை ஆட்கொண்ட அனுபவத்தைக் கூறுகின்றார்.

செல்லப்பர் வழங்கிய ஆத்மிக உபதேசம் பற்றி நற்சிந்தனையில் இடம்பெறும் "எங்கள்குருநாதன்" என்ற பாடலில் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார். பத்துப் பாடல்களின் தொகுப்பைக் கொண்டதாக இது அமைவது குறிப்பிடற்பாலது. அதில் இடம்பெறும் ஒரு பாடல் ஆத்மபோதம் பற்றியும் குரு மகிமை பற்றியும் போற்றுகின்றது.

தேகநீ யல்லவென்றா னெங்கள் குருநாதன்
சித்தத்திற் றிகழ்கின்றா னெங்கள் குருநாதன்
மோகத்தை முனியென்றானெங்கள் குருநாதன்
முத்திக்கு வித்ததென்றா னெங்கள் குருநாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டா னெங்கள் குருநாதன்
விண்ணும் மண்ணு மாகி நின்றா னெங்கள் குருநாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள் குருநாதன்
சத்தியத்தைக் காண வைத்தா னெங்கள் குருநாதன்

என்ற பாடலில் யோகர் சுவாமிகளின் அகக் காட்சி தெளிவுபெறுகின்றது. நல்லூரிலே தான் ஆட்கொள்ளப்பட்ட முறையினை

ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரில்
பேசாதன வெல்லாம் பேசினான் – கூசாமல்
நின்றேன் நீ யாரடா வென்றே அதட்டினான்
அன்றே யான் பெற்றேன் அருள்.

நல்லூரில் தேரடியில் நாம் கண்ட சிவயோகம்
சொல்ல முடியாத சுகத்தினைக் காட்டி விடும்.

எனவும் குரு உபதேசத்தின், பெருமை பாராட்டுகின்றார். யோகசுவாமி "ஆசான் அருள்" என்ற பாடலில் தாம் பெற்ற ஆத்மிக அனுபவத்தைத் தெளிவுபடக் கூறுகின்றார்.

ஆசான் அருளால் அகந்தை அழிந்தது
ஆசான் அருளால் அகங் குளிர்ந்தது
ஆசான் அருளால் அன்பு வளர்ந்தது
ஆசான் அருளால் ஆசானைக் கண்டிலன்"

என்ற பாடல் ஆசான் அருளின் மூலம் பெறக்கூடிய பயன்கள் பற்றி கூறுகின்றது. இத்தகைய பாடல்களில் திருமூலரின் திருமந்திரப் பாடல்களின் சாயல் தென்படுவது குறிப்பிடற்பாலது. இவ்வாறு யோகசுவாமிகளின் பாடல்கள் எளிமையும் பொருட் செறிவும் கொண்டனவாய் ஆத்ம சாதனைக்கு வழிகாட்டுவனவாக விளங்குகின்றன. செல்லப்ப சுவாமிகள் யோக சுவாமிகளுக்கு ஞானமார்க்கமே நல்வழி காட்டக்கூடியதென்பதை அறிவுறுத்தினார். "யாரடா நீ" என்று ஆரம்பத்தில் அதட்டிக் கூறியவர் பின் ஒருபடி மேலே சென்று " தேரடா உள்" என்று உன் அகத்தைப் பார்க்கும்படியும் உள்ளத்தை உணர்வதற்குத் தடையாக விருக்கும் உலகியலை அறவே ஒழிக்க வேண்டியதன் அவசியத்தை அழுத்திக்

கூறுவதுபோல் "தீரடா பற்று" எனவும் கூறிய செல்லப்பரை முத்தி நெறி காட்டிய வித்தகராகவே கண்டார். "ஒரு பொல்லாப்புமில்லை என ஓதினான்" அப்படியேயுள்ளது. யாரறிவார் என மாதவத்தோன் கூறினான் எனவும் வியந்து கூறுகின்றார்.

வியந்து நின்ற வென் தனக்கு வேதாந்த உண்மை
பயந்தீரும் வண்ணமவன் பண்பாய் – நயந்துகொள்
அப்படியேயுள்ளது காண் ஆரறிவார் என்றானால்
ஒப்பில்லா மாதவத்தோன் உற்று"

என்ற உபதேசத்தினால் பெற்ற ஆத்ம அனுபவம் பற்றிக் குறிப்பிடுமிடத்து,

அயலறியாத ஆனந்தம் பெற்றேன்
மயலறியாத மௌனத்திலுற்றேன்
செயலறியாத சிவத்தினைக் கற்றேன்
இயம நியமாதி யாவையும் மற்றேன். எனவும்

"அளந்தேன் அருளால் ஆன்மாவை அறிந்தேன்"

எனவும் தாம் பெற்ற அருளனுபவங்களை நற்சிந்தனை வாயிலாக உலகோர் ஆத்மிக வாழ்வுக்கு பயன்படக்கூடியதாக அறிவுறுத்துகின்றார் யோக சுவாமிகள்.

**யோகசுவாமிகள் ஆத்மிக வாழ்வுக்குக் காட்டிய வழிகள்**

யாழ்ப்பாணத்துச் சைவ மக்களுக்கும் தமிழகம், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் மேற்குலக நாடுகளில் வாழும் அன்பர்களுக்கும் ஆத்ம ஞானத்தைப் பரப்பும் ஞான குருவாகத் திகழ்ந்து வாழ்வில் உய்வுபெற

வழிகாட்டிய பெருமை யோக சுவாமிகளையே சாரும். வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்வியலைக் காட்டித் தரும் வகையில் கடவுள் நம்பிக்கை, ஒழுக்கம், இறைவழிபாடு, பிறவுயிர்க்கிரங்குதல், மக்கள் சேவை, பெரியோரைப் பேணுதல், அற நூல்களைக் கற்று ஒழுகுதல், மௌன நிலையில் தியானித்தல், ஆன்ம ஈடேற்றம் எனப் பல்வேறுபட்ட அருளுபதேசங்கள் மனுக்குலத்தை ஆத்மிக வழியில் ஆற்றுப்படுத்துவன வாக அமைந்தன.

யோக சுவாமிகளின் நற்சிந்தனைகளில் செல்லப்பா சுவாமிகளின் மகா வாக்கியங்கள் எனப் போற்றத்தக்க உபதேசங்கள் இழையோடியுள்ளன.

1. ஒரு பொல்லாப்புமில்லை
2. முழுதும் உண்மை
3. எப்பவோ முடிந்த காரியம்
4. நாமறியோம்.

இவற்றைத் தாரகமந்திரமாகக் கொண்ட மந்திர மாலைகளும் யோகசுவாமிகளின் நற்சிந்தனையிற் செறிந்துள்ளன. யோக சுவாமிகளின் நற்சிந்தனையில் இம்மகா வாக்கியங்கள் நூற்றுக்கணக்கான இடங்களில் இடம் பெற்றுள்ளன. இம்மகா வாக்கியங்களின் மாபாடியமே நற்சிந்தனை என்று கூறுமளவிற்கு அவை சிறப்புப் பெற்றுள்ளன. சுவாமிகளின் சிந்தனைகளைப் பாரறியச் செய்துவரும் சிவதொண்டன் நிலையமும் இம் மகா வாக்கியங்களை அரிய மந்திரங்களாகப் போற்றி வருகின்றது. இவற்றின் முக்கியத்துவம் கருதி நிலையத்தில் இவை சுலோகங்களாகப் பொறிக்கப்பெற்றுள்ளன. சுவாமிகள் பற்றி வெளிவந்த நூல்களில் அவரது நிழற்படத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் நான்கு மகா வாக்கியங்கள் பொறித்து அவரது ஆத்மிக தரிசனத்தைக் காண்பதும் சுவாமிகளின் அடியார்களது இயல்பாக அமையுமளவிற்கு அவற்றின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. சிந்தை தெளிவு பெறுவதற்கு அடியார்களுக்கு இம் மகா

வாக்கியங்கள் பெரிதும் உதவி வருகின்றன. செல்லப்ப தேசிகர் இம்மகா வாக்கியங்களைக் கண்டறிந்து உலகுக்கு வெளிப்படுத்தியதானது சமய தத்துவம் மற்றும் சித்தர் மரபில் ஒரு மைல்கல் என சமய அறிஞர் குறிப்பிடுவர். இம்மகா மந்திரங்கள் எழுத்தில் விளக்குவதற்குரியனவல்ல. மற்றும் வாயாரப் பேசுவதற்குமுரியனவல்ல; மாறாக இவை உள்ளத்தால் உணர்ந்து உணர்வொடுங்கி நிற்பதற்குரிய மறைபொருள் கொண்ட மந்திரங்களாகக் கொள்ளப்படுகின்றன. அதன் காரணமாகவே செல்லப்பா சுவாமிகள் இவற்றை வெறுமனே சொல்லிக் கொண்டிருந்தார். சிவயோக சுவாமிகள் சிவத்தின் மகிமையை தமது நற்சிந்தனையில் போற்றுமிடத்து,

முழுது முண்மையென முனிசொன்மொழி
எழுதிக் காட்டிட என்னாலிசையுமோ

எனவும்

செப்ப முடியாதடி தங்கமே தங்கம்
செல்லப்பன் திருவாக்குத் தங்கமே தங்கம்

எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும்

ஒரு பொல்லாப்புமில்லை என்பான்
உண்மை முழுது மென்பான்
ஒருவருக்கும் தெரியா தென்பான் – சின்னத்தங்கம்
ஒவியம் போலிருந்தானடி

எனக் குறிப்பிடுகின்றார்.

எவ்வாறாயினும் சுவாமியுடன் தொடர்புகொண்ட பல அன்பர்கள் இவற்றின் மகத்துவத்தை எழுத்தில் போற்றியுள்ளனர். செல்லத்துரை சுவாமிகளின் யோக சுவாமிகள் பற்றிய நூலில் "மகா வாக்கியங்கள்" என்ற இயலில் இவை பற்றி விளக்கம் தர முற்பட்டுள்ளார். நான்கு மகாவாக்கியங்களையும் ஒரு பொல்லாப்புமில்லை என்பதை முன்னிட்டு வழங்குவது மரபாகிவிட்டது. இதற்குரிய காரணத்தைச் செல்லத்துரை சுவாமிகள் குறிப்பிடுமிடத்த அது செல்லப்பர் அளித்த தீட்சா மந்திரமாக

அமைந்தமை பற்றியே எனத் தெரிவதாகக் குறிப்பிடுகின்றார்.

" ஒரு பொல்லாப்பும் இல்லை எனும் ஓசையோடு வந்து நோக்கித்
திருவருள் தீக்கை செய்த செல்வன் சீரடிகள் காப்பு"

"ஒருநாள் என்றெனை உற்று நோக்கி ஓர் பொல்லாப்புமில்லை
என்று...
சும்மா இருக்கும் சூட்சத்தில் மாட்டி விட்டான்"

என்னும் நற்சிந்தனை பாடற் பகுதிகள் இதற்குரிய சான்றுகளாக அமைகின்றன. "ஒரு பொல்லாப்புமில்லை" என்பதன் சார்பு மொழி "ஒரு குறையும் இல்லை" என்பது குறிப்பிடப்படுகின்றது. குருவருளால் திருவடி ஞானம் வாய்க்கப் பெற்று இந்த உலகம் கனவென்று தெளிந்து சும்மா இருக்கும் சுகத்தில் அனுபவிக்கும்போதே ஒரு பொல்லாப்பும் இல்லை. இத்தகைய சுகத்தில் உலகமும் சிவன் வடிவமாகவும் சிவன் செயலாகவும் தோன்றும். அவ்வாறு தோன்றவே பொல்லாங்கு நிறைந்த உலகமாகத் தோன்றியதும் ஒரு பொல்லாப்புமில்லாத சிவப்பொலிவாகவே அமையும்.

"எல்லாம் சிவன்செயல் எல்லாம் சிவன் வடிவு
எல்லாம் அவனன்றோ அன்னே என்னும்
எல்லாம் அவன் வடிவு எங்கும் அவனென்றால்
பொல்லாப்பிங்கேதடி அன்னே என்னும்"

என்பது ஒரு பொல்லாப்புமில்லை என்பதற்கான பொருள் விளக்கப் பாடலாக அமைகின்றது.

முழுதும் உண்மை என்பது சர்வம் பிரம்ம மயம் என்பதும் இதுவே எனக் குறிப்பிடுவர். சர்வம் என்பது முழுதும் எனவும் பிரம்ம மயம் என்பது உண்மையெனவும் பொருள்படும். எல்லாம் சிவரூபம் எல்லாம் சிவன் செயல் என்பன உண்மை முழுதும் என்பதன் சார்பு மொழிகள். முழுதும் உண்மை என்பது அனுபவ சித்தாந்தம் என்பது தெளிவு.

எப்பவோ முடிந்த காரியம் என்பதன் சார்பு வாக்கியங்கள் ஒரு நூதனமுமில்லை. முடிந்த முடிவு, அப்படியே உள்ளது என்பனவாகும்.

அப்படியே உள்ளதென அத்துவித உண்மையினைச்
செப்பினான் செல்லப்பன் தேர்.

என்று நற்சிந்தனை விளக்குகின்றது.

எப்பவோ எனும் சொல் உண்மைப் பொருள் உலக காரியமாகத் தோன்றும் அநாதித் தன்மையைக் குறிக்கின்றது. ஆகவே எப்பவோ முடிந்த காரியம் எனும் பெரும் பெயரானது உண்மைப் பொருளான இறைவன் இருந்தபடி இருக்க அவர்முன் உலக மாயை விரிந்து தோன்றுவது அப்படியே உள்ள காரியம் என்பதை உணர்த்துகின்றது. இத்தொடர் ஒருவற்கு சித்த சுத்தியைத் தருவதாகும்.

எப்பவோ முடிவானதென் றெங்கட்குச்
செப்புவா ரவர் சிந்தை தெளிந்திட

என நற்சிந்தனை கூறும்

நாமறியோம் என்ற மகாவாக்கியத்தின் சார்பு வாக்கியம் ஆரறிவார் என்பதாகும். அண்ட சராசரத்து அதிசயம் தன்னை ஒருவருமறியார் உண்மை ஒன்றே உள்ளது. இந்த ஒரே உண்மை எண்ணறிந்த கோலங்களாகத் தோன்றுவதேன்? இவைபோன்ற வினாக்களுக்கு ஒவ்வொருவரும் ஒன்றோடொன்று தொடர்புடாத விளக்கங்களைத் தந்துள்ளனர். ஆனால், செல்லப்பா சுவாமிகளோ "அது அப்படியே உள்ளது காண் ஆரறிவார்" என்று கூறுவார்.

ஒருவருமறியா ரென்றான் எங்கள் குருநாதன்
ஓங்கார வழியென்றான் எங்கள் குருநாதன்

என்பது சுவாமிகளின் நற்சிந்தனை. ஓங்காரத்து உட்பொருளை அறியும் நெறியை ஒருவரும் அறியார் யோகசுவாமிகள் அறிவதற்கு ஒன்றுமில்லை என மிக எளிமையாகக் கூறியுள்ளார்.

செல்லப்பா சுவாமிகளின் இந்நான்கு மகா வாக்கியங்களை யோக சுவாமிகளும் சற்குருநெறி நின்று நம்பிக்கையுடன் ஏற்று தமது நற்சிந்தனையில் பலவாறு போற்றி ஆத்மிக வாழ்வுக்கு வளம் சேர்த்துள்ளார்.

**தன்னையறிதல்**

சுவாமிகளது உபதேசங்களின் திரண்ட பொருள் "என்னை எனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்" எனும் நற்சிந்தனையில் செறிந்திருக்கிறது. சுவாமிகளது குருநாதன் குருநெறி சென்று தன்னைத் தன்னாலறியும் ஞானவித்தையையே தமது அருள் வாக்குகளால் பயிற்றுவித்து வந்தார்.

சுவாமிகள் ஒருமுறை அடியாரொருவரிடம்

"நமக்கிங்கு ஒரேயொரு வேலையே உள்ளது
அது தன்னையறிதல்"

எனக் குறிப்பிட்டுள்ளார்.

சிவயோக சுவாமியின் ஒரேயொரு தொண்டு தன்னையறியப் பயிற்றுவித்தல் ஆகும். தன்னையறியும் ஞானவித்தையை அறிய விழைபவர்களுக்கு "நாம் யார்" என்பது முதன்மையான அறிபொருளாகும். "நாம் உடம்பன்று; மனமன்று புத்தியன்று; சித்தமன்று நாம் ஆத்மா" என்பதை பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு சுவாமி கூறியுள்ளார். சிவயோக சுவாமி தன்னையறிவதற்காக நாடிவந்த அன்பர்களுக்கு அவரவர் தம் ஆற்றலுக்கும் நாட்டத்திற்கும் ஏற்ப பல்வேறு சாதனை முறைகளை அறிவுறுத்தியுள்ளார். அவற்றுள் தியான சாதனை முதன்மையானது. நாம் ஆத்மா என்பதே உண்மை – அவ்வுண்மையை மறந்துவிட்டதே அறியாமை, அறியாமையை நீக்குவதற்குரிய வழி அவ்வுண்மையை மீண்டும் நினைவுபடுத்தலாகும். இதனை ஞாபகப்படுத்துவதே பெரிய சாதனை என மிகவும் எளிமையாகக் கூறியுள்ளார். அதன் பயன் ஆனந்தமான முக்திப்

பேறாகும். நற்சிந்தனை ஒன்றில் தன்னை அறிந்தால் தவம் வேறில்லை எனக் குறிப்பிட் டுள்ளார்.

தன்னை அறிந்தால் தவம் வேறில்லைத்
தன்னை அறிந்தால் தான் வேறில்லைத்
தன்னை அறியச் சகலமு மில்லைத்
தன்னை அறிந்தார் தாபத ராமே.

எனப் பாடியுள்ளார். தன்னை அறியும் சிறப்புப் பற்றி மகாகவி பாரதியார் தமது விநாயகர் நான்மணி மாலை செஞ்சொற் பாமாலையில் விநாயகரிடம் தன்னையாளும் திறனை அருளும்படி வேண்டுகின்றார்.

தன்னை யாளும் சமர்த்தெனக் கருள்வாய்
தனைத்தான் ஆளும் தன்மை நான் பெற்றிடில்
எல்லாப் பயன்களும் தாமே எய்தும்
ஒளிபெற்றுக்.
கல்விபல தேர்ந்து கடமையெல்லாம் நன்றாற்றித்
தொல்வினைக் கட்டு எல்லாம் துறந்து இங்கு
பழியற்று வாழ்ந்திடக் கண் பார்ப்பாய்.

எனத் தன்னை யறிதலினால் கிட்டும் பயன்களைக் கூறுகின்றார். ஆத்மிக வாழ்வில் இதனைச் சாதனையில் கொண்டு வர தியானம், யோகம் ஆகியன பொருத்தமான வழிமுறைகளாகும். சுவாமிகள் தியானத்தை வலியுறுத்தியபோதும் யோக நெறியில் நாட்டங் கொண்டவர்கள் யோக சாதனை பயில்வதற்கு வாய்ப்பான பாடல்கள் சிலவற்றையும் பாடியுள்ளார். யோக சாதனையில் முன்னேறும்பொழுது ஏற்படும் மலர்ச்சியின் அடையாளங்களும் பாடப்பட்டிருக்கின்றன.

சுவாமியின் "இன்பம் முப்பது" என்ற நற்சிந்தனை பாடல் ஆத்மிக வாழ்வுக்கேற்ற பல வழிகளைக் கூறுகின்றது. வேத சாஸ்திரம் கற்றல், வீணான நட்பை விட்டிடுதல், நாதன் நாமத்தை ஓதுதல், நாம் சிவமென நாடுதல் பேதம் யாவையும் நீக்குதல். எங்கும் ஈசனைக் காணுதல், ஏதிலார் பால் இரங்குதல், பொங்கு கோபத்தைப் போக்குதல், புவியின் ஆசையை நீக்குதல், தானே தானாய்த் தழைத்திடல், தங்கும் யோகத்தில் அமருதல், அஞ்செழுத்தினை ஓதுதல், அறிவால் அஞ்சையும் வென்றிடல், நெஞ்சில் வஞ்சகம் நீக்குதல், தன்னைப் போல் பிறர்பால் அன்பு செலுத்துதல், ஓம் சிவாய நம என ஓதுதல், நல்லோர் பாதத்தை நண்ணுதல், சோதி ரூபத்தைக் காணுதல், பழியும் பாவமும் நீக்குதல் போன்றவை இன்பமே என போற்றி அன்பர்களை ஆத்மிக வாழ்வுக்கு எளிமையாக வழிப்படுத்துகின்றார்.

**சிவ தொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்**

சுவாமிகள் "தொண்டர் நாங்களே" என்ற நற்சிந்தனை பாடல் மூலம் சிவ தொண்டராக விளங்குபவர்க்குரிய பக்குவநிலையைக் கூறுகின்றார்.

தொண்டர் நாங்களே – சிவ
தொண்டர் நாங்கள் (தொண்)

வேதாந்த சித்தாந்தம் வேறாகக் காணோம்
வீட்டு நெறியினில் நாட்டம் மிகவுள்ள (தொண்)

சிவ சிவ வென்றெந்த வேளையுஞ் சொல்லி
சீவன் சிவனென்று சித்தத்திற் கொள்ளும் (தொண்)

என்ற நற்சிந்தனைப் பாடலில் சிவ தொண்டர் பெருமை, வேதாந்த சித்தாந்த சமரசம் சீவன் சிவனென சித்தத்திற்கொள்ளும் பக்குவநிலை பற்றி சுவாமிகள் போற்றியுள்ளார். மேலும் சிவ தொண்டு மகிமை பற்றிக் கூறுமிடத்து,

சிவதொண்டு செய்வார்க்குச் செல்வமுண்டு கல்வியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சீருமுண்டு பேருமுண்டு
சிவதொண்டு செய்வாக்குச் சிந்தைத் தெளிவுமுண்டு
சிவதொண்டு செய்வார்கள் சேருவரோ திருநெறியில்

எனத் தமது நற்சிந்தனைப் பாடலில் போற்றியுள்ளார்.

சிவதொண்டன் சமய ஏடு 1935 ஐனவரி மாதம் தொடங்கப் பெற்றது. மகுட வாசகமாக அமைந்தது,

எண்ணுவர் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

என்னும் சுலோகமாகும், யோகசுவாமிகள் சிவதொண்டன் ஏட்டினை கண்ணை இமை காப்பதுபோல் காத்து வந்தார். காரணம் யாதெனில் தமது நற்சிந்தனையான சிவ சிந்தனையே சிவ தொண்டனில் இலட்சியமாக விருந்தது. அவரது நற்சிந்தனைகளை ஏந்திவரும் ஏடாகவும் அது திகழ்ந்தது. சுவாமிகள் கூறும் ஆத்மிக விடயங்கள் இதில் விரிவு பெற்றன. சமய கட்டுரைகள் வெளிவந்தன. மகாவாக்கியங்களை விளக்கி அவ்வப்போது எழுதப்பட்ட கட்டுரைகளும் வெளிவந்தன. பகவத்கீதை, பிரம்மசூத்திரம் திருமுறை மலர்கள், தாயுமானவர் பாடல் போன்ற ஞான நூல்கள் தொடர்பான கட்டுரைகள் ஆன்ம விளக்கத்திற்கு உதவின. வேதாந்தம் சிந்தாந்தம் மாத்திரமின்றி பௌத்தமதம், இஸ்லாம், சூபித்துவம் மற்றும் கிறிஸ்தவ சமயங்கள் சார்ந்த ஞான விளக்கங்களும் இடம்பெற்றன. ஆங்கிலத்திலும் ஞான விடயங்கள் வெளிவந்தன. இத்தகைய ஞான நிலை சார்ந்த படைப்புகள் சிவதொண்டனில் வெளிவந்து மக்களிடையே ஆத்மிக வாழ்வு சிறக்க உதவியது. சிவதொண்டன் ஏட்டின் இலட்சியத்தை சுவாமிகள் சிவதொண்டன் வாழ்த்து என்ற நற்சிந்தனைப் பாடல்கள் மூலம் எடுத்துக் கூறியுள்ளார்.

**சிவதொண்டன் நிலையம்**

சுமாமிகள் ஆத்மிக வளம் பெற்ற சிந்தனைகள் மக்களது ஆத்மிக வாழ்வுக்குத் தொடர்ந்தும் சென்றடையச் செய்யும் நோக்கில் அமைக்கப்பட்டது சிவதொண்டன் நிலையமாகும். தனக்குப் பின் தமதன்பர்கள் தொடர்ந்தும் நல்வாழ்வு வாழ வேண்டுமென சுவாமிகள் விரும்பியதன் பயனாய் மலர்ந்தது சிவதொண்டன் நிலையம்.

சிவ தொண்டன் நிலையத்திற் சேரீர்
தியானஞ் செய்து கடைத் தேறீர்
மௌனமாயிருந்திளைப்பாறீர்
மந்திரமிது வெனக் குறியீர்.

சிவயோக சுவாமிகளின் இந்தப் பாடலில் சிவதொண்டன் நிலையத்தின் தாரக மந்திரம் அடங்கியுள்ளது. அதுவே சிவத்தியானம். மௌனமாயிருந்து இளைப்பாறுதலே தியானம் . தியான மண்டபத்திற்குச் செல்லும் ஒவ்வொருவருக்கும் ஆத்மிக அனுபவம் மலர்ச்சி பெறக் கூடியதாக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. விநாயகரகவல், மற்றும் திருவெழுக்கூற்றிருக்கை, நற்சிந்தனைப் பாடல்கள், பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் போன்ற புராணபடனம் இடம் பெறுகின்றன. சிவதொண்டன் நிலையத்தில் உள்ள அனைத்தும் உள்ளடக்கிய இடம் தியான பூமியாகவே பரிணமித்தது. மற்றும் ஆருத்திராதரிசனம்,சிவராத்திரி திருவடிப்பூசை போன்ற விழாக்களும் இடம் பெற்று வருகின்றன.

இலங்கையில் வடபால் உள்ள வண்ணார்பண்ணையில் மலர்ந்த சிவதொண்டன் நிலையம் போன்று கிழக்கு மாகாணத்தில் சித்தாண்டி செங்கலடியிலும் சுவாமி திருவடிக் கலப்புற்ற அதே திங்களில் மற்றுமொரு சிவதொண்டன் நிலையம் உதித்தது. டாக்டர் பண்டிதர் கே என்

நவரத்தினம் என்பார் எழுதிய நூலாகிய **யூனியர் சீனியர் [1999] (Junior senior)** மூலம் அவுஸ்திரேலியாவிலும் சிவ தொண்டன் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை தெரியவருகின்றது. இச்சிவ தொண்டன் நிலையங்கள் ஊடாக சுவாமிகளின் ஆத்மிக உபதேசங்களும் நற்சிந்தனைகளும் சமய அனுட்டானங்களும் மக்களை ஆத்மிக வாழ்விற்கு ஆற்றுப் படுத்துகின்றன.

**கொழும்புத் துறை ஆச்சிரமம்**

கொழும்புத் துறையில் ஓரிடத்தில் இலுப்பை மரத்தடியிலிருந்த சிறு கொட்டிலே சுவாமிகளின் ஆரம்ப ஆச்சிரமமாக விளங்கியது. ஆத்மிக நிலையில் நலம் பெறும் நோக்கில் சுவாமிகளை நாடிவந்தோர் பல திறப்பட்டவர்களாவர் சுவாமிகளின் ஆச்சிரமமாகிய அந்தக் கொட்டிலிலும் சுற்றாடலிலும் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆத்மிகம் பொங்கித் ததும்பும் அருளாலயமாக மிளிர்ந்தது. தினமும் காலையும் மாலையும் அடியவர்கள் அங்கு கூடினர். பெரியவர், சிறியவர், பெண்கள், ஆத்மிக நாட்டமுடையோர், கல்விமான்கள், சைவசமயிகள், வேற்று சமயத்தினர், படித்தவர்கள் பாமரர்கள் எனப் பலதிறத்தினரும் அங்கு கூடினர். சுவாமிகளின் ஆத்மிக வழிகாட்டலில் இத்தகையோருக்கு இருந்த ஈடுபாட்டிற்கு அவர்களது ஆச்சிரம தரிசனம் சான்றாக அமைந்தது. சுவாமிகள் தமது நல்லுபதேசங்களினால் ஆயிரக்கணக்கான பத்தர்களை நல்லாற்றுப்படுத்தி – ஆத்மிக சாதனையில் ஈடுபடும்படி வழிகாட்டினார். அவர் ஒரு சிறந்த ஆத்மிக ஞானி என்பதனை பக்தர்கள் வருகை எடுத்துக் காட்டியது. இவ்வாறு சுவாமிகளின் ஆத்மிகஞ் சார்ந்த செயற்பாடு உலக மக்களின் ஆத்மிக வாழ்வை மேம்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டமைந்தன. உலக மக்களின் ஆன்மிக உயர்வுக்காக இறைவனை வேண்டுகின்ற பாடல்களும் அவரது நற்சிந்தனைகளில் உள்ளன. நல்லை முருகப்பெருமானைத் துதித்துப் பாடுமிடத்து,

நலைப் பதிக்கரசே நல்லைப் பதிக்கரசே நல்வழி காட்டிடா
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டிடா.

**அன்பே கடவுள்**

சிறந்த சித்தராகிய திருமூலர் கூறிய நெறி நின்று தமது ஆத்மிக நெறியை வளம்படுத்தியவர் சுவாமிகள்

அன்பு, சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

(திருமந்திரம்270)

இச் சிந்தைனையை அடியொற்றிச் சுவாமிகளும் அன்பே கடவுளெனப் போற்றுகின்றார்.

அன்பே கடவுள் அன்பே யுலகம்
அன்பே உயிர்கள் அன்பே யனைத்தும்
அன்பே ஆவதும் அழிவதும் போலாம்
அன்பின் அதியம் ஆரறிவாரே.

என்ற நற்சிந்தனைப் பாடல் குறிப்பிடற்பாலது. எல்லாவற்றையும் அன்பின் வடிவாகக் கண்ட சுவாமிகள் அன்பு ஒன்றே சிவப்பேற்றுக்கும் சிவ சிந்தனைக்கும் வழிவகுக்கும் என்பதை அனைவருக்கும் தமது சிந்தனை மூலம் அறிவுறுத்தியுள்ளார். "சிவனுக்கு அன்பு செய் அனைத்துஞ் சிவமே" என்ற நற்சிந்தனைப் பாடலில் ஆத்ம ஈடேற்றத்திற் கான வழிமுறைகளை சுவாமிகள் தெளிவுபடக்கூறியுள்ளார்.

சிவனடிக் கன்பு தீவினை யொழிக்கும்
சிவனடிக் கன்பு தெளிவினை யளிக்கும்
சிவனடிக் கன்பு சித்தங் களிக்கும்
சிவனடிக் கன்பு சின்மய மாக்குமே

என்று வழிப்படுத்திய தோடு செய்த பாவம் போக்கவும், சிவஞான சித்தி பெறவும் சிவனடிக் கன்பு செய்க என அறிவுறுத்தியுள்ளார். சுவாமிகள் தரும் ஆத்மிக வாழ்வுக்குரிய நற்சிந்தனையில் அன்பைச்சிவமெனப் போற்றியதோடு அதன்மகிமை யையும்உணர்த்தியுள்ளார்.

**மூலமந்திரச்சிறப்பு**

மூலமந்திரங்களை தினமுஞ் சிந்தனை செய்தல் மிக உன்னதமான ஆத்மிகப் பயிற்சியாகும். மூல மந்திர ஜபம் உன்னதமானது என்பதை சுவாமிகள் அறிவுறுத்தியுள்ளார். நினைப்பவரைக் காப்பதே மந்திரம். அம்மந்திரங்களுக்கு எல்லாம் மூல மந்திர ஓங்காரம். சிவ சிந்தனைக்கு ஏற்றது மூலமந்திரமாகிய "நமச்சிவாய". நாயன்மார்கள் எவ்வாறு நமச்சிவாய மந்திரத்தை போற்றித் துதித்தனரோ அது போன்று சுவாமிகளும் தமது நற்சிந்தனையில் போற்றுகின்றார்.

" ஓங்காரத்துள்ளே ஒளிருஞ் சிவனடியை
நீங்கும் நெறியுண்டோ"

"ஓங்காரத்தின் உட்பொருளானவன்
ஆங்காரம் தீர்த்தான் என்றுஞ் தீபற"

என தமது நற்சிந்தனைப் பாடலில் ஓங்காரத்தைப் போற்றுகின்றார் சுவாமிகள் மேலும் "நமச்சிவாய நாம் சொல்லும் மந்திரம்" நமச்சிவாய வாழ்கவென நயந்து பாடவேண்டும்.

எனவும்

"அஞ்செழுத்தாலே அனைத்தும் ஆயின
அஞ்செழுத்தாலே அனைத்தும் உதித்தன
அஞ் செழுத்தாலே அனைத்தும் நிலைத்தன
அஞ்செழுத்திசயம் யாரறிவாரோ"

எனவும் தமது நற்சிந்தனைப் பாடல்களில் போற்றி அம்மந்திரங்களின் ஜபத்தினால் ஆத்மிக வாழ்வு வளம் பெறும் என சுவாமிகள் எடுத்துக்காட்டியுள்ளார்.

சுவாமிகள் வளர்ந்து வரும் இளந்தலைமுறையினரை ஒழுக்க சீலர்களாக வாழ்வதற்கேற்ற அறிவுரைகளையும் தமது நற்சிந்தனைப் பாடல் வழி எடுத்துக் கூறி அவர்களையும் சமயஞ் சார்ந்த ஆத்மிக வாழ்வுக்கு ஆற்றுப் படுத்தியுள்ளார்.

ஒழுக்கம் விழும்பந்தரும் தம்பிமாரே
ஓம் என்று சிந்தை செய்வீர் தம்பிமாரே
அழுக்காறு அவா வெகுளி தம்பிமாரே
ஆன்மாவைப் பந்திக்கும் தம்பிமாரே
வழுக்கி விழுந்தாலும் தம்பிமாரே
மலரடியைச் சிந்தை செய்வீர் தம்பிமாரே
பழுத்த வடியவருடன் தம்பிமாரே
பாடிப் பணிய வேண்டும் தம்பிமாரே

என ஒழுக்கம், சிவத்தியானம் ஆகியவை எமது வாழ்வு பக்குவப்பட ஏற்ற சஞ்சீவி என சுவாமிகள் தமது நற்சிந்தனை வழி அறிவுறுத்துகின்றார்.

**நிறைவாக**

இவ்வாறு சுவாமிகள் செல்லப்பா சுவாமிகளை ஞான குருவாகவும் சற்குருவாகவும் போற்றி வழிபட்டு அவரது உபதேசங்களால் ஆத்ம ஈடேற்றமும் விழிப்புணர்வும் பெற்றவராய் அவரது மகாவாக்கியங்களின் விளக்கவுரையாக அவரது நாவிலிருந்து வெளிவந்த அரிய ஆத்மஞானச் சிந்தனைகளாகிய நற்சிந்தனைப் பாடல்கள் வழி ஆத்மிக வாழ்வு வளம் பெற ஆயிரக்கணக்கான அடியவர்களுக்கு ஞானகுருவாக விளங்கியவர். அவரது நற்சிந்தனைப்பாடல்கள் யாப்பு முறைகளிலும் பொருளமைதியிலும் தேவாரம், திருவாசகம், திருமந்திரம், தாயுமானவர், வள்ளலார் ஆகிய அருளாளர்களின் பாசுரங்களின் சாயலைக் கொண்டு விளங்குகின்றமை சிறப்பம்சமாகும். அனுபூதி நிலையில் சுவாமிகள் பாடிய நற்சிந்தனைக ளாலும் உபதேசங்களினாலும் ஈழவளநாட்டிலும், தமிழகத்திலும் மேலை நாடுகளிலும் உள்ள எண்ணற்ற அடியார்கள் ஆத்மிக வாழ்வில் ஈடுபடும் வாய்ப்பினைப் பெற்றனர். சைவ சமயத்தையும் தியான யோக நெறிமுறைகளையும் மக்கள் பின்பற்றி ஒழுக வழிகாட்டியவர். அவரது அரிய பணிகளை மக்கள் மத்தியில் தொடர்ந்து முன்னெடுப்பதில் அவரது சிந்தனையில் உருவாகியசிவதொண்டன் நிலையங்கள் அரிய ஆத்மிக பணியாற்றிவருகின்றன.

சிவயோக சுவாமிகளின் ஆத்மிக வழிகாட்டலின் மூலம் அருளாசி பெற்ற ஞான பரம்பரையொன்று அவரது நற்சிந்தனைகளையும் அருளுபதேசங்களையும் ஈழத்தில் மட்டுமின்றி உலகம் அனைத்திலும் கொண்டு சென்று அவரது ஞான ஒளியைப் பரப்பி வருகின்றனர். அமெரிக்க நாட்டவரான "றொபேர்ட் ஹன் சென்" (Robert Hansen) என்பவர் மேலைத் தேய நடன நிகழ்வொன்றுக்காக இலங்கை வந்த போது ஆத்மிக நாட்டம் மேலிட்டவராய் உய்யும் வழிகாணவேண்டும் என்ற நோக்கில் சிவயோக சுவாமிகளின் தரிசனம் 1949 ஆம் ஆண்டு அவருக்குக்கிடைத்தது. அவரின் ஆத்மீக தாகத்தை அறிந்த சுவாமிகள் அவரை ஊக்கப்படுத்தும்

நோக்குடன் அவரது முதுகில் தட்டி "இச்சத்தம் அமெரிக்காவில் கேட்கும்; நீ உலகம் முழுவதும் சுற்றிக் கோவில்கள் கட்டுவாய்; ஆயிரக்கணக்கில் மக்களை போஷிப்பாய்", என ஆசீர்வதித்தார். சுவாமிகளின் ஆசிபெற்ற அந்த அமெரிக்கர் சிவநெறியே உண்மையென உணர்ந்து " சிவாய சுப்பிரமுனிய சுவாமி" என்ற தீட்சா நாமம் பெற்று அமெரிக்க நாட்டில் உள்ள ஹவாயில் சைவ சித்தாந்த ஆதீனம், மற்றும் சிவாலயம் அமைத்து சிவநெறியின் சிறப்பை உலகறியும் நற்பணியில் ஈடுபட்டமை சுவாமிகளின் ஆத்மிக வழிகாட்டலின் உன்னதத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். மேற்குநாட்டைச் சேர்ந்த சுவாமிகளின் மற்றுமொரு சீடர் இலங்கையின் ஆங்கில தேசாதிபதியாக விளங்கிய சோல்பரிப் பிரபுவின் மகனான ஜேம்ஸ் ரம்ஸ்பொதம் (James James Ramsbotham) என்பவராவர்.

சிவயோகியாயும் சிவஞானியாயும் சீவன் முக்தராயும் ஆத்மிக நண்பனாகவும் ஆசானாகவும் சுற்றத்தவனாகவும் திகழ்ந்து ஆத்மிகத் தந்தையாக ஏறத்தாழ அரைநூற்றாண்டு காலத்துக்கு மேலாக பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு, ஆத்மதத்துவம், தன்னைத் தான் அறியும் மார்க்கம், சிவத்தியானம், சிவதொண்டு, யோகம், சிவபக்தி, ஒழுக்கம் சற்குருநெறி ஆகிய அரிய ஆத்மிக விடயங்களைத் தமது நற்சிந்தனைகள் வாயிலாக வெளிப்படுத்தி ஆன்ம ஈடேற்றத்திற்கு உறுதுணையாக விளங்கியவரும் இன்றும் எம்மத்தியில் தோன்றாத் துணையாக எம்முடனிருந்து வழிநடத்துபவருமாகிய யோக சுவாமிகளுக்கு அன்பிற்குரிய கைம்மாறாகவும் காணிக்கையாகவும் இந்நினைவுப் பேருரை அமைவதாகுக.

இவ்வரிய பணியை முன்னெடுத்த அனைவருக்கும் பெருமை தரும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந் நிறைவுப் பேருரை நிகழ்வது மிகவும் பொருத்தமானதாகும். யோக சுவாமிகளின் உபதேசங்கள், நற்சிந்தனைகள், அறவுரைகள் காட்டும் ஆத்மிக வாழ்வு பற்றிய இந் நினைவுப் பேருரை ஒருசில அம்சங்களின் பிரதிபலிப்பே – அவரது

சிந்தனைகளை மேலும் விரிவாகப் பல்வேறு பரிமாணங்களில் ஆராயும் வாய்ப்பு உள்ளன என்பதையும் குறிப்பிடுவது பொருத்தமாகும். இவ்வரிய சந்தர்ப்பத்தை எனக்களித்த மதிப்பார்ந்த துணைவேந்தர் அவர்களுக்கும் கலைப் பீடாதிபதி அவர்களுக்கும் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர் களுக்கும் இந்நினைவுப் பேருரைக்கு உபகரித்த சான்றோருக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவிப்பதோடு, சபையில் அமைதியுடன் இந்நினைவுப் பேருரையைச் செவிமடுத்த அனைத்துப் பெரியோர்களுக்கும் எனது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன்.

நன்றி

**உசாத்துணை நூல்கள்**


அஞ்ஞாதன், **ஆன்மிகம் - ஒரு சிந்தனை**, (1998), குட்புக்ஸ் பப்பிளிகேஷன், சென்னை.

அருணாசலம், மு., **சிவயோகசுவாமிகள் வரலாறு**, (1985) ஸ்ரீகாந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

குருதோத்திரமாலை, **(1996) செல்லப்பா சுவாமிகள் குருபூசை வெளியீடு**, கீன் அச்சகம், மட்டக்களப்பு.

கோபாலகிருஷ்ணஐயர்,ப., **இந்துப்பண்பாட்டு மரபுகள் (1992)** வித்யா வெளியீடு, யாழ்ப்பாணம்.

சிவன் அடியான், **உயிர்க்குயிர்க் கடவுளாகிய சிவயோக சுவாமிகள், (1987)**, செட்டியார் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

சுப்பிரமணிய பாரதி, **பாரதி நூல்கள், வசனங்கள் 2ஆவது தொகுப்பு. சுவாமி விவேகானந்தர், ஆன்மிக வாழ்வு (1987)**, ஸ்ரீ ராம கிருஷ்ணமடம், சென்னை.

செல்லத்துரை சுவாமிகள், **யோக சுவாமிகள் - வாழ்க்கையும் வழிகாட்டுதலும்**, (2ஆம் பதிப்பு – 2004), சிவதொண்டன்சபை, யாழ்ப்பாணம்.

திருமூலர், திருமந்திரம், **(1ஆம் பதிப்பு-1993)**, மௌனாச்சிரமம் – கொழும்பு.

நவரத்தினம், கே. என். **யூனியர் சீனியர் (1999)** சிவதொண்டன் நிலையம், அவுஸ்திரேலியா.

மாசிலாமணி, மு. க. **சிவயோக சுவாமிகள் காட்டிய வழி (2008)** சிவயோக சுவாமிகள் நம்பிக்கை நிதியம், கொழும்பு.

யோகசுவாமிகள், **நற்சிந்தனை**, (2ஆம் பதிப்பு, 1962) சிவதொண்டன் சபையார், யாழ்ப்பாணம்.

**விஜயநகரப் பேரரசும் கலாசார மறு மலர்ச்சியும்**, சி. பத்மநாதன், க. இரகுபரன், ஸ்ரீ பிரசாந்தன் (பதிப்பாசிரியர்கள்) (2010), இந்து சமய கலாசார அலுவலர்கள் திணைக்களம், கொழும்பு.

வேதநாதன், மா., **சித்தர் சித்தாந்தம் (2009)** சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம். யாழ்ப்பாணம்.

வைரமுத்து, மு., **என் நெஞ்சில் இடங்கொண்ட ஒரு பெரியார் யோக சுவாமி (3ஆம் பதிப்பு 1998)**, சிவதொண்டன் சபை, யாழ்ப்பாணம்.

ஸ்ரீகுருகீதை, **அண்ணா உரை, (1976)** ஸ்ரீ ராமகிருஷ்ணமடம், சென்னை.

**ஸ்ரீராம கிருஷ்ண உபதேச மஞ்சரி, (1975)**, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருச்சி.



பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் பேராதனையிலுள்ள இலங்கைப்பல்கலைக்கழகத்தில் 1969ஆம் ஆண்டு சம்ஸ்கிருதச் சிறப்புக்கலைமாணிப்பாடத்தில் முதலாம் பிரிவிற் பட்டம் பெற்றவர். பேராதனைப்பல்கலைக்கழகத்தில் 1969-1971 காலப்பகுதியில் சம்ஸ்கிருதத் துறையில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றி; பின்னர் 1975ஆம் ஆண்டுவரை திட்டமிடல் வேலை வாய்ப்பு அமைச்சில் திட்டமிடல் அதிகாரியாகப் பணியாற்றியவர். 1975ஆம் ஆண்டு யாழ்ப்பாண வளாகத்தில் இந்து நாகரிகத்துறையில் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றதைத் தொடர்ந்து தமது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வினைத் தமது குருநாதராக விளங்கிய அமரர் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களது நெறிப்படுத்தலின்கீழ் மேற்கொண்ட இவர் 1982ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் முதன் முதலாக வழங்கிய கலாநிதிப்பட்டத்தைப் பெற்றவர் என்பது குறிப்பிடற்பாலது. இந்துநாகரிகத்துறையிலும் இதுவே முதலாவது கலாநிதிப்பட்டமாகும். சிவாகமங்களும், சிற்பசாஸ்திரமும் சித்திரிக்கும் சிவ விக்கிரவியல் என்பதே இவரது கலாநிதிப்பட்ட ஆய்வாகும்.

இவர் 1991-92ஆம் காலப்பகுதியில் ஆறுமாதகால உயர்நிலை ஆய்வாளருக்கான புலமைப்பரிசில்பெற்று; சுவீடன் உப்சலா பல்கலைக்கழகம் சென்றார். அந்நாட்டில் ஏனைய பல்கலைக்கழகங்கள் விடுத்த அழைப்பை ஏற்று இந்து சமயம் இந்துக் கலைகள் மற்றும் இந்து தத்துவம் சார்ந்த விரிவுரைகள் நிகழ்த்தியுள்ளார். இவர் இந்து நாகரிகம் சார்ந்த நூல்களை வெளியிட்டுள்ளார். மேலும், உள்நாட்டு - வெளிநாட்டு ஆய்வுச்சஞ்சிகைகளில் தமிழிலும், ஆங்கிலத்திலும் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். யாழ்ப்பாணப்பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத்தலைவராகப் பதினைந்து வருடங்கள் நெறிப்படுத்தியவர்; 1995ஆம் ஆண்டு இந்து நாகரிகத்துறைப் பேராசிரியராக நியமனம் பெற்றார். இவர் கலைப் பீடாதிபதியாக 2001ஆம் ஆண்டு ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டு மூன்று ஆண்டு காலம் அப்பீடத்தை வழிநடத்தியவர். பல தடவைகள் பதில் துணை வேந்தராகவும் பணியாற்றியவர்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராகப் பல வருடங்கள் தமது பங்களிப்பை நல்கியவர். முப்பது வருடகாலம் பல்கலைக்கழகத்திற் கல்விப் பணியாற்றி 2004ஆம் ஆண்டு ஓய்வுபெற்றார். யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம் இவருக்கு வாழ்நாட் பேராசிரியர் (Professor Emeritus) அந்தஸ்து வழங்கிக் கௌரவித்துள்ளது. 2010ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுப்பட்டமளிப்பு விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவர் கல்விசார் உள்ளிட்ட நிர்வாக மேம்பாடு, ஆய்வுத்துறை, உயர்கல்வி வளர்ச்சி ஆகியவற்றுக்கு ஆற்றியுள்ள மதிப்பார்ந்த பணிகளைப் பாராட்டி, கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

Harikanan, Jaffna.